# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப்பரீட்சை– 2017

| தரம் - 06 | சைவநெறி | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

**பகுதி – I**

**❖ மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01) ஓம் என்னும் பிரணவ மந்திரப் பொருளாய் விளங்குபவர்.
1. முருகன் 2. விநாயகர் 3. சிவன் 4. வைரவர்

02) நெற்றியில் குட்டிக் கும்பிடுதல் கதையுடன் தொடர்புடையவர்.
1. கஜமுகாசுரன் 2. அகத்தியர் 3. நரகாசுரன் 4. சிங்காசுரன்

03) உணவு உண்ணத் தொடங்கு முன் பாட வேண்டிய தேவாரம்.
1. "மண்ணில் நல்ல வண்ணம்...." 2. "இடரினுந் தளரினும்...."
3. "அன்னம் பாலிக்கும்....." 4. "கூற்றாயினவாறு...."

04) ஒரு மனிதனுக்கு உயர்வைத் தருவது.
1. பணம் 2. புகழ் 3. உண்மை 4. உயர்பதவி

05) கர்ணவேதனம் என அழைக்கப்படும் சடங்கு.
1. பெயர் சூட்டுதல் 2. காது குத்தல் 3. ஏடு தொடக்கல் 4. சோறூட்டல்

06) "கோயில்" என சிறப்பாக அழைக்கப்படும் தலம்.
1. தில்லை 2. பழனி 3. திருவாடுவதுறை 4. திருவாரூர்

07) பஞ்சபுராணம் ஓதும் போது மூன்றாவதாக ஓதப்படுவது.
1. தேவாரம் 2. திருப்பல்லாண்டு 3. திருவாசகம் 4. திருவிசைப்பா

08) நரகாசுரனுடன் தொடர்புடையது.
1. மானம்பூ 2. சூரன்போர் 3. பிள்ளையார் கதை 4. தீபாவளி

09) சிவனடியார்களுக்கு திருவமுது படைக்கும் தொண்டு புரிந்தவர்.
1. திருக்குறிப்புத் தொண்ட நாயனார் 2. கண்ணப்ப நாயனார்
3. இளையான் குடிமாற நாயனார் 4. குங்குலியக்கலய நாயனார்

10) விஷ்ணுவுக்குரிய விரதம்.
1. பிரதோஷம் 2. ஏகாதசி 3. திருக்கார்த்திகை 4. சிவராத்திரி

11) சிவாலய தரிசன பலனைத் தருபவர்.
1. சோமஸ்கந்தர் 2. ஆஞ்சநேயர் 3. சண்டேஸ்வரர் 4. நடராஜர்

12) சுந்தரமூர்த்தி நாயனார் முத்தியடைந்த தினம்
1. சித்திரைச் சதயம் 2. வைகாசிமூலம் 3. ஆனிமாதம் 4. ஆடிச்சுவாதி


kalvi.lk

13) பசுவதைக்கு அஞ்சி இரவோடு இரவாக நாட்டை விட்டு தமிழகம் சென்றவர்.
1. ஞானப்பிரகாசசுவாமிகள்
2. விபுலானந்தர்
3. ஸ்ரீ இராமகிருஷ்ணர்
4. விவேகானந்தர்

14) இறைவனைப் "பல்லாண்டு வாழ்க" என்று வாழ்த்தியப் பாடியவர்.
1. சேக்கிழார் 2. திருமூலர் 3. சேந்தனார் 4. கருவூர்த்தேவர்

15) "தூல லிங்கம்" எனப்படுவது.
1. கோபுரம் 2. பலிபீடம் 3. கொடிமரம் 4. விமானம்

16) "கேதார கௌரி" விரதத்திற்குரிய கடவுள்.
1. விநாயகர் 2. சிவபெருமான் 3. உமாதேவியார் 4. முருகன்

17) பாண்டிய மன்னனுடைய அரச சபையில் முதலமைச்சராகப் பணிபுரிந்தவர்.
1. திருஞான சம்பந்தர்
2. திருநாவுக்கரசர்
3. சுந்தர மூர்த்தி நாயனார்
4. மாணிக்கவாசக சுவாமிகள்

18) திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் தந்தையின் யாகத்திற்கு பொன் வேண்டிப் பாடிய பாடல்.
1. "இடரினுந்தளரினும்....."
2. "தோடுடைய செவியன்..."
3. "மண்ணில் நல்ல வண்ணம்...."
4. "கற்றாங்கெரியோம்பி....."

19) விழுமியப் பண்புகளில் ஒன்றாக அமைவது.
1. புகழ்ச்சி 2. பெருமை 3. நன்றிமறவாமை 4. பேராசை

20) ஆலய வழிபாட்டினால் நாம் பெறும் பயன்.
1. உறவினர்களைச் சந்தித்தல்
2. பொழுதுபோக்கு
3. நண்பர்களைச் சந்தித்தல்
4. வாழ்வு வளம் பெறும்.

[20x2=40 புள்ளிகள்]


kalvi.lk

## பகுதி – II

❖ **1ஆம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1. பின்வரும் திருமுறைப் பாடல்களில் இரண்டினை வரிக்கிரமமாக எழுதிப் பாடியவர் பெயர், தலம் என்பவற்றையும் தருக.
    1. "பித்தாபிறை சூடி ..............."
    2. "பூசுவதும் வெண்ணீறு.........."
    3. "ஒளிவளர் விளக்கே.........."
    4. "சீருந்திருவும் பொலியச்........" [6+1+1x2=16 புள்ளிகள் ]

2. "விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்"
    1. விநாயகர் என்பதன் பொருளை எழுதுக.
    2. விநாயகர் வழிபாடு இடம் பெறும் இடங்கள் மூன்றினையும் குறிப்பிடுக.
    3. வெற்றி வேற்கை என்னும் நூலை இயற்றியவரைக் குறிப்பிடுக.
    4. விநாயகரை எவ்வாறு வழிபடுவீர்? விநாயகரை வழிபடுவதால் கிடைக்கும் பயன்கள் மூன்று எழுதுக. [2+3+3+3=11 புள்ளிகள் ]

3. "விழுமியங்களைப் பேணி வாழ்வில் உயர்வோம்".
    1. நீங்கள் அன்றாடம் கடைப்பிடிக்கும் சமயப் பழக்க வழக்கங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
    2. பஞ்ச புராணம் பாடவேண்டிய ஒழுங்கு முறையைக் குறிப்பிடுக.
    3. சமய விழுமியப் பண்புகள் நான்கு தருக.
    4. திருவிளக்கேற்றுவதற்கு பயன்படுத்தக் கூடிய எண்ணெய் வகைகள் மூன்று தருக. [2+3+3+3=11 புள்ளிகள் ]

4. "வாழ்வியற் சடங்குகளுக்கு மதிப்பளிப்போம்".
    1. வாழ்வியற் சடங்கு என்றால் என்ன?
    2. வாழ்வியற் சடங்கின் இருவகைகளையும் குறிப்பிடுக. உதாரணம் தருக.
    3. உமது வாழ்வில் இதுவரையில் நடைபெற்ற மூன்று சடங்குகளைக் குறிப்பிடுக.'
    4. ஏடு தொடக்குதலுக்கு வழங்கப்படும் வேறு பெயர்களைக் குறிப்பிடுக. ஏடு தொடக்குதல் எப்போது நடைபெறும்? [2+3+3+3=11 புள்ளிகள் ]

5. "ஆலயம் தொழுவது சாலவும் நன்று"
    1. ஆலயம் என்பதன் பொருளை எழுதுக.
    2. ஆலயத்தில் நீங்கள் செய்யும் தொண்டுகள் நான்கு தருக.
    3. ஆலயத்திற்கு கொண்டு செல்லப்படும் பூசைப்பொருட்கள் எவை என எழுதுக.
    4. ஆலய வழிபாட்டின் கிடைக்கும் நன்மைகள் மூன்று தருக.

    [2+3+3+3=11 புள்ளிகள் ]

6. "வாழி திருநாவலூர் வன்றொண்டன் பதம் போற்றி.."
    1. திருமுறைகளைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் பெயர்களையும் குறிப்பிடுக.
    2. சுந்தரமூர்த்தி நாயனாரின் தாய், தந்தை பெயர், இயற்பெயர் என்பவற்றைத் தருக.
    3. சுந்தரமூர்த்தி நாயனாரின் அற்புதங்கள் மூன்று எழுதுக.
    4. திருநாவுக்கரசருக்கு சமணர்கள் இழைத்த கொடுமைகள் எவை?

    [2+3+3+3=11 புள்ளிகள் ]

7. பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
    1. சைவ இல்லம்
    2. விரதங்கள்
    3. பெரியோரைக்கனம் பண்ணல்
    4. தைப்பொங்கல்
    5. ஏடுதொடக்கல்

    [5x1/2=11 புள்ளிகள் ]


kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

## புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457